STC.No. 1190/2023
நாள் 18.12.2025.
D.W.1 – (பாரதி)
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **முதல் விசாரணை**

நான் விருதுநகரில் சத்திரரெட்டிபட்டியில் குடியிருக்கிறேன். நான் தமிழ்நாடு அரசு வேளாண்துறையில் இளநிலை உதவியாளராக பணிபுரிகிறேன். என் மனைவி பெயர் மகாலட்சுமி. என் மனைவி ஸ்ரீவில்லிபுத்துாரில் பிறந்து வளர்ந்தார். நான் பிறந்து வளர்ந்த ஊர் சிவகாசி. புகார்தார் எனக்கு நேரடியாக பழக்கம் கிடையாது. என் மனைவியின் பெற்றோர் மூலமாக புகார்தாரரை தெரியும். ஸ்ரீவில்லிபுத்துாரில் எனக்கு வீடு உள்ளது நான் அதனை 2016 ம் ஆண்டு வாங்கினேன். நான் அந்த சொத்தை ஸ்ரீவில்லிபுத்துார் நகர கூட்டுறவு வங்கியில் ரூ.6 லட்சம் கடன் பெற்றும், என் பெற்றோரிடம் ரூ.2 லட்சம் கடன் பெற்றும் மேற்படி சொத்தை ரூ.7,55,000/–ற்கு கிரயம் வாங்கினேன்.பிற செலவும் செய்து பத்திர பதிவும் செய்தேன். நான் அந்த சொத்து பத்திரத்தை வங்கியில் அடமானம் வைத்தேன். ஸ்ரீவில்லிபுத்துார் சார் பதிவாளர் அலுவலகம் 18.03.2016 தேதியிட்ட கிரய ஆவணம் எண்.1463/2016 நகல் **எ.சா.ஆ.2** ஆகும்.

நான் 2017 ம் ஆண்டு என் மாமியார் ஸ்ரீவில்லிபுத்துாரில் ஒரு புது வீடு கட்டினார். என் மனைவி என்னிடம் அவரின் தாயார் இராமலட்சுமி புகார்தாரரிடம் ரூ.5 லட்சம் கேட்டிருப்பதாக தெரிவித்தார். 2017 ம் ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் தொகை கேட்டிருந்தார். புகார்தாரர் அவ்வாறு கடன் வழங்க அரசு ஊழியர் இருவர் செக்யூரிட்டியாக புரோநோட்டு மற்றும் காசோலை கொடுக்கவேண்டும் என கேட்டார். நான் என் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா காசோலையை நிரப்பாமல் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். மேலும் நிரப்பப்படாத அச்சிடப்பட்ட புரோநோட்டில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். கஸ்துாரி என்பவர் இராமலட்சுமியின் உடன்பிறந்த தங்கை. கஸ்துாரி நிரப்பப்படாத அச்சிடப்பட்ட புரோநோட்டில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தார்.

நான் சிவகாசி ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா பிரதான கிளையில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். அந்த வங்கி கணக்கு எண்.35314107100. அந்த வங்கி கணக்கு பட்டியல் 01.10.2019 முதல் 30.09.2020 வரை தாக்கல் செய்கிறேன். அது **எ.சா.ஆ.3** ஆகும். எ.சா.ஆ.3 வங்கி கணக்கில் இருந்து 28.12.2019 அன்று ரூ.9,000/– மற்றும் 28.09.2020 அன்று ரூ.50,000/– புகார்தாரருக்கு ஜிபே மூலமாக அனுப்பியுள்ளேன்.

நானும் என் மனைவி மகாலட்சுமியும் சிவகாசி ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா பிரதான கிளையில் வங்கி கணக்கு வைத்துள்ளோம். அந்த வங்கி கணக்கு எண்.35349142779. அந்த வங்கி கணக்கு பட்டியல் 01.11.2019 முதல் 30.09.2020 வரை தாக்கல் செய்கிறேன். அது **எ.சா.ஆ.4** ஆகும். எ.சா.ஆ.4 வங்கி கணக்கில் இருந்து 11.11.2019 அன்று ரூ.3,500/–, 05.05.2020 அன்று ரூ.10,000/–, 19.07.2020 அன்று ரூ.15,000/– மற்றும் 19.09.2020 அன்று ரூ.50,000/– புகார்தாரருக்கு ஜிபே மூலமாக அனுப்பியுள்ளோம்.

நான் சிவகாசி யூனியன் பாங்க் ஆப் இந்தியாவில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். அந்த வங்கி கணக்கு எண்.335502010309000. அந்த வங்கி கணக்கு

பட்டியல் 01.07.2023 முதல் 31.07.2023 வரை தாக்கல் செய்கிறேன். அது **எ.சா.ஆ.5** ஆகும். புகார்தாரர் என் மாமியாரிடம் வட்டி பாக்கி ரூ.45,000/- இருப்பதாக சொன்னதன் பேரில் நான் எ.சா.ஆ.5 வங்கி கணக்கில் இருந்து 21.07.2023 அன்று ரூ.40,000/- மற்றும் ரூ.5,000/- என இரண்டு ஜிபே மூலமாக மொத்தம் ரூ.45,000/- புகார்தாரரின் மகள் சுபஸ்ரீ அவர்கள் வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். புகார்தாரர் தெரிவித்து அந்த வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பினேன்.

என் மனைவி பெயரில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, சிவகாசி கிளையில் நடப்பு கணக்கு எண்.37375790871 உள்ளது. அந்த வங்கி கணக்கு பட்டியல் 01.12.2019 முதல் 31.03.2020 வரைக்கானதை தாக்கல் செய்கிறேன். அது **எ.சா.ஆ.6** ஆகும். அந்த வங்கி கணக்கில் இருந்து 29.12.2019 அன்று ரூ.10,000/- புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு ஜிபே மூலமாக அனுப்பினேன். எனக்கு மேற்படி வங்கி கணக்குகளை தவிர சிவகாசி HDFC யில் வங்கி கணக்கு இருந்தது. அந்த வங்கி கணக்கில் இருந்து புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு 04.06.2019 அன்று ரூ.47,800/- ஜிபே மூலமாக அனுப்பினேன். அந்த தொகையை செலுத்தியதற்காக எனக்கு வந்த ஜிபே பரிவர்த்தனை பதிவில் இருந்து Printout தாக்கல் செய்கிறேன். அது **எ.சா.ஆ.7** (புகார்தாரரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு தாக்கல் செய்யப்படுகிறது) ஆகும். 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் புகார்தாரர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க புகார்தாரரின் மகள் சுபஸ்ரீ வங்கி கணக்கிற்கு இராமலட்சுமியின் சகோதரி கஸ்தூரியின் வங்கி கணக்கில் இருந்து காசோலை மூலமாக அசல் ரூ.5 லட்சம் கடனை செலுத்தி, தீர்த்துவிட்டோம்.

இராமலட்சுமியின் சகோதரி கஸ்தூரி விருதுநகர் ஸ்டேட் பாங்க் இந்தியாவில் வங்கி கணக்கு வைத்துள்ளார். அந்த வங்கி கணக்கு பட்டியல் 01.04.2021 முதல் 31.03.2022 வரைக்கானதை தாக்கல் செய்கிறேன் அது **எ.சா.ஆ.8** ஆகும். மேற்படி வங்கி கணக்கில் 17.04.2021 அன்று சுபஸ்ரீ என்பவர் பெயரில் ரூ.5 லட்சத்திற்கான காசோலை வசூலாகி உள்ளது. நான் மேற்படி வங்கி கணக்குகள் மூலமாகவும், நேரடியாகவும், அசலுக்கும் வட்டிக்கும் புகார்தாரரிடம் தொகை செலுத்தி வந்தேன். புகார்தாரரிடம் நான் மற்றும் கஸ்தூரி கொடுத்த ஆவணங்களை கேட்டதற்கு புகார்தாரர் ஆவணங்களை வேறெங்கோ வைத்திருப்பதாகவும் அதனை எடுத்து தருவதாக கூறி காலம் கடத்தி வந்தார். 2023ம் ஆண்டு என் மாமியார் புகார்தாரரிடம் ஆவணங்களை கேட்டபோது மேலும் வட்டி பாக்கி ரூ.45,000/- இருப்பதாகவும், அதனை செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். எங்கள் ஆவணங்கள் புகார்தாரர் வசம் இருப்பதால் 2021ம் ஆண்டே அனைத்து கடனையும் செலுத்திவிட்டு இருந்தாலும், அதன்பின் மேற்சொன்னவாறு புகார்தாரரின் மகள் சுபஸ்ரீ வங்கி கணக்கில் ரூ.45,000/-த்தை செலுத்தினேன். அதன்பின்னும், புகார்தாரர் ஆவணங்களை தேடி கொண்டிருப்பதாக கூறி ஆவணங்களை தரவில்லை.

வழக்கறிஞர் அறிவிப்பு வந்தவுடன் நான் என் மனைவி என் மாமியார் மற்றும் அவர் சகோதரி கஸ்தூரி ஆகியோர் புகார்தாரரை சந்தித்து வழக்கறிஞர் அறிவிப்பு குறித்துக் கேட்டோம். அதற்கு அவர் தெரியாமல் செய்துவிட்டதாகவும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க மாட்டேன் எனவும் தெரிவித்தார். அதனால் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. புகார்தாரர் ஆவணங்கள் அவரது வழக்கறிஞரிடம் இருப்பதாகவும், பெற்று தருவதாகவும் தெரிவித்தார். புகார்தாரர் ஆவணங்களை நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. இந்த வழக்கை, நான் நிரப்பாமல் கொடுத்திருந்த புரோநோட்டு மற்றும் காசோலையை வைத்து தாக்கல் செய்துள்ளார். மேலும் எனக்கு எதிராக

மேற்சொன்ன ஆவணங்களை வைத்து உரிமையியல் வழக்கு ஒன்றும் தாக்கல் செய்துள்ளார். கஸ்தூரி என்பவருக்கு எதிராகவும் 2021ம் ஆண்டு ரூ.3 லட்சம் வாங்கிவிட்டு தரவில்லை என கூறி சிவில் வழக்கு எண்.423/2024 ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு புரோநோட்டு 2017 ம் ஆண்டு என் மாமியார் புகார்தாரரிடம் வாங்கிய கடனிற்காக கொடுத்த புரோநோட்டு ஆகும். நானும் கஸ்தூரியும் புகார்தாரரிடம் கடன் வாங்கவில்லை. என் மாமியாருக்காக ஆவணங்கள் கொடுத்து என் மாமியாருக்கு ரூ.5 லட்சம் புகார்தாரர் கொடுத்தது தான். புகார்தாரரின் வழக்கு பொய் வழக்கு அதனை தள்ளுபடி செய்யவேண்டும்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.